# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 14.11.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் பெயர்களுள் ஒன்று **வாஹிப்** அல்லது **வஹ்ஹாப்** என்பதாகும். பல்வேறு அகராதி வல்லுநர்கள் இந்த சொல்லுக்கு கொடுத்திருக்கின்ற பொருள் ஏறத்தாழ ஒரே மாதிரிதான் உள்ளது. எனவே நான் லிஸானுல் அரப் என்ற அகராதி நூலில் கூறப்பட்டுள்ள பொருளை எடுத்துள்ளேன். அதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. **அல் வஹ்ஹாப்** என்பது அல்லாஹ்வின் ஒரு பண்பாகும். அதாவது, **அல் முன்கரு அலல் இபாத்** – தனது அடியானின் மீது அருள்புரிபவன். இவ்வாறு அல்லாஹ்வின் ஒரு பண்பு **வாஹிபுன்** என்பதாகும். இதன் பொருள் ஒரு அன்பளிப்பை கொடுத்து விட்டு அதற்குப் பதிலாக ஒன்றைப் பெரும் நோக்கமோ அல்லது பிற நோக்கங்களோ இல்லாமல் தூய்மையான எண்ணத்துடன் வழங்கப்படும் (ஹிபா) அன்பளிப்பு ஆகும். மேலும் இவ்வாறு பெரும் அளவில் அன்பளிப்புகள் வழங்கிக் கொண்டிருப்பவருக்கு **வஹ்ஹாப்** என்று கூறப்படும்.

இந்த சொல் மனிதனுக்கும் கூறப்படுகிறது. ஆனால், உண்மையான **வஹ்ஹாப்** அல்லாஹ்வே ஆவான். அவன் தன் அடியார்கள் வேண்டும்போதும் வேண்டாமல் இருக்கும்போதும் மிக அதிகமாக வழங்குகிறான். ஒரு உண்மையான மூஃமின் இதனை சிந்தித்துப் பார்த்தால் அல்லாஹ்வின் **வஹ்ஹாப்** என்ற பண்பு மற்றும் அவனது அருட்கொடை கிடைத்துக் கொண்டிருப்பதை ஒவ்வொரு நொடிப்பொழுதும் காணலாம். மேலும் நமது இறைவன் உயிருள்ளவன் என்பதற்கு இதுவே சாட்சியாக அமைகிறது. ஆனால் ஒரு உலகவாதி இவ்வுலகில் கிடைக்கின்ற தற்காலிக பொருட்களையே மிகவும் நம்புகிறார்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் இந்த சொல்லை பல்வேறு கோணங்களில் பயன்படுத்தியுள்ளான். மேலும் தனது இந்த பண்பையும் பயன்படுத்தியுள்ளான். மேலும் நபிமார்கள் மற்றும் தனது விருப்பத்திற்குரிய நல்லடியார்கள் மீது தான் வழங்கிய அருட்கொடைகளையும் இறைவன் திருமறையில் விளக்கியுள்ளான். மேலும் தனது இந்த பண்பின் மூலம் துஆவின் பக்கமும் கவனமூட்டியுள்ளான். இதில் தூய சந்ததிகளைப் பெறுவதற்கான துஆ, சமூக நன்மைக்காகவும், ஈமானில் உறுதி பெறுவதற்காகவும் என பல துஆக்கள் அடங்கியுள்ளன. இப்போது நான் திருக்குர்ஆனின் பார்வையில் சில துஆக்களை எடுத்துரைக்கின்றேன். அல்லாஹ் மூஃமின்களின் சந்ததிகளை அவர்களின் பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கும் அதன் உரிமையை பேணுவதற்கும் துஆ செய்ய வேண்டும் என இறைவன் தன் நல்லடியார்களுக்கு கவனமூட்டியுள்ளான். கணவன் மனைவிக்காகவும், மனைவி கணவனுக்காகவும் துஆ செய்ய வேண்டும். இதனால் நன்மை செய்யும் பழக்கம் ஒருவருக்கொருவர் ஏற்படும். மேலும் தலைமுறை தலைமுறையாக நன்மைகள் நிலைத்திருக்கும்.

இறைவன் கூறுகின்றான்:

**வல்லதீன யகூலூன ரப்பனா ஹப்லனா மின் அஸ்வாஜினா வதுர்ரியாத்தினா குர்ரத்த அஃயுனிவ் வஜ்அல்னா லில்முத்தகீன இமாமா** – மேலும் அவர்கள் எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக. மேலும் எங்களை இறையச்சம் உடையவர்களுக்கு முதன்மையானவராக ஆக்குவாயாக என்று வேண்டுவார்கள். (25:75)

இது ஒரு பெரிய துஆவாகும். அதாவது, இறைவா எங்களுக்கு எங்கள் கண்களை குளிர வைக்கும் சந்ததிகளை வழங்குவாயாக. இறைவனிடம் கண்களுக்கு குளிர்ச்சியை வேண்ட வேண்டும் என்று இறைவனே

நமக்கு கற்றுத் தருகிறான். மேலும் இதன் அருள் வேண்டப்படுகிறது. மனிதன் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அந்த அருள் எவ்வளவு பெரிய அருள் என்பதை மனிதன் புரிந்து கொள்ளவே முடியாது. அதை இறைவனே நன்கு அறிவான்.

இறைவன் திருக்குர்ஆனில் கூறியுள்ள நன்மைகளை சரிவர பேணி நடப்பதால் கணவனும் மனைவியும் பிள்ளைகளும் இவ்வுலகில் ஒருவருக்கொருவர் கண்களுக்கு குளிர்ச்சியாக அமைவது மட்டுமின்றி மறுவுலகிலும் இந்த அருட்களை பெறுகின்றனர். ஒரு மூஃமின் நிலையாக செய்த நன்மைகளை அவரது சந்ததிகள் அவர் மரணமடைந்த பின்னரும் தொடர்ந்து செய்து வருகின்றனர். மேலும் நல்ல சந்ததிகள் தங்களது பெற்றோருக்காக துஆ செய்கிறார்கள். இந்த துஆக்கள் மறுமையில் அவரது பதவிகள் உயர்வதற்கு காரணமாக அமைகின்றன. இன்னும் அவருடைய பதவிகள் உயர்வதற்கு காரணமாக அமைகின்ற பிற நற்செயல்கள் செய்கின்றனர். ஆக, சந்ததிகளின் இந்த நற்செயல்களும், துஆக்களும் ஒரு மூஃமினுக்கு மறுமையிலும் கண்களுக்கு குளிர்ச்சியை தருகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்:

**ஃபலா தஃலமு னஃப்ஸு(ன்)ம் மாஉக்ஃபிய லஹும் மின் குர்ரத்தி அஃயுன். ஜஸாவுன் பிமா கானூ யஃலமூன்** – அவர்களின் (நற்)செயல்களுக்குப் பிரதிபலனாக கண்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியவை, என்ன (என்ன) மறைத்து வைக்கப்பட்டுள்ளன வென்பது எவருக்கும் தெரியாது. (32:18)

இங்கு இறையச்சத்தை மனதில் கொண்டு அல்லாஹ்வை வணங்கவும் அவன் பாதையில் செலவு செய்தும் பிற நன்மைகளையும் தொடர்ந்து செய்து வருகிறவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. மேலும் இவர்கள் இரவில் அல்லாஹ்விற்காக கண் விழித்து தாங்களும், தங்களது பிள்ளைகளும் நேர்வழியில் நிலைத்திருக்க வேண்டும் என துஆ செய்கிறார்கள். இவர்கள் பெறுகின்ற கண்களின் குளிர்ச்சியை அல்லாஹ் மட்டுமே நன்கு அறிவான். இவர்களுள் கணவன் மனைவிக்காகவும், மனைவி கணவனுக்காகவும் துஆ செய்கிறார்கள். இவர்கள் அனைவரும் இறையச்சத்தை மேற்கொண்டவாறு நேர்வழியில் நிலைத்திருக்கிறார்கள். அல்லாஹ் தனது விருப்பத்திற்குரிய பாதையில் இவர்களை வழிநடத்துகின்றான். எனவே இபாதுர் ரஹ்மான் – அல்லாஹ்வின் நல்லடியார்கள் இந்த துஆவை நன்மையை செய்து கொண்டே வேண்டுகின்றனர். மேலும் தக்வாவின் பாதையில் முன்னேறுகின்ற சந்ததிகளை தங்களுக்குப் பின்னால் விட்டுச் செல்ல வேண்டும் என விரும்புகிறார்கள். எனவே, அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாகுகின்ற சந்ததிகளை விட்டுச் செல்ல வேண்டும் என்ற நன்மையின் பக்கம் அல்லாஹ் இந்த துஆவை கற்றுத் தந்ததன் முலம் கவனமூட்டுகிறான். மேலும் நாம் விட்டுச் செல்கின்ற சந்ததிகள் நமக்கு இவ்வுலகில் மட்டுமல்லாது மறு உலகிலும் நமது கண்களுக்கு குளிர்ச்சி அளிக்க வேண்டும் என அல்லாஹ் இங்கு கவனமூட்டியுள்ளான்.

**வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா** என்று கூறி நீங்களும் தக்வாவின் வழி நடந்தால் தான் நீங்கள் முத்தகீன்களுக்கு இமாமாக முடியும். உங்கள் செயல்கள் இறையச்சம் உடையதாக இல்லை என்றால், பிறகு உங்கள் வட்டத்திற்குள் நீங்கள் முத்தகீன்களுக்கு இமாமாக முடியாது. எனவே, நம்மில் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த துஆவை செய்தவாறு நாம் தக்வாவின் வழியில் நடக்கின்றோமோ, மேலும் நாம் ஒருவருக்கொருவர் உரிமையை சரியாக பேணுகிறோமா? நாம் நமது சந்ததிகளின் தர்பிய்யத்தின் எல்லா நிபந்தனைகளையும் பூர்த்தி செய்கிறோமா? அவர்கள் இறையச்சத்தின் பாதையில் நடக்க நாம் சரியான தர்பிய்யத் கொடுத்துள்ளோமா? என்று பார்க்க வேண்டும். வீட்டில் கணவனும், மனைவியும் தக்வாவின் வழி நடக்கவில்லை என்றால் தங்களது குழந்தைகளின் உரிமையில் இந்த துஆ நிறைவேறும் காட்சிகளை எவ்வாறு பார்க்க முடியும்? தக்வா இல்லையென்றால், கிலாஃபத் மற்றும் இந்த ஜமாஅத்தின் அருளிலிருந்து எவ்வாறு பலன் பெற முடியும்? கிலாஃபத்திற்கு அல்லாஹ் (அமலே சாலிஹா) நற்செயல்களை நிபந்தனையாக வைத்துள்ளான். தக்வா இல்லையென்றால் நற்செயல்கள் எவ்வாறு செய்ய

முடியும்? நற்செயல்கள் இல்லையென்றால் இறையச்சமும் இருக்க முடியாது. எனவே தக்வா இல்லையென்றால் ஒருவருக்கொருவர் கண்களுக்கு குளிர்ச்சியும் அளிக்க முடியாது. பிள்ளைகளும் கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக்கூடியவர்களாக இருக்கமாட்டார்கள்.

எனவே, குழந்தைகளின் கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக்கூடியவர்களாக ஆகுவதற்கு தமது இபாதத் மற்றும் தக்வாவின் நிலையை ஆராய்வது மிகவும் அவசியமாகும். நாம் அந்த தரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறோமா?

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கணவன் மனைவி தொடர்பாக கூறியுள்ள அறிவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இரவில் எழுந்து இறைவனை வணங்கி தன் மனைவியை எழுப்புகின்றவர், அவள் கண்விழிப்பதில் சோம்பேறித்தனம் காட்டினால் அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்புகின்றவர் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக. அவ்வாறே மனைவி இரவில் கண் விழித்து இறைவனை வணங்கி தன் கணவனையும், எழுப்புகிறாள். அவன் எழவில்லையென்றால் அவனை எழுப்புவதற்காக அவன் முகத்தில் தண்ணீரை தெளிப்பவள் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக என்று கூறினார்கள்.

ஆக, இந்த கடமை கணவனுக்கும் இருக்கிறது. மனைவிக்கும் இருக்கிறது. இருவரும் இறைவணக்கத்தின்பால் கவனம் செலுத்தினால் அவர்களின் சந்ததிகளும் அவர்களது கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக்கூடியவர்களாத் திகழ்வார்கள். சில ஆண்களைப் பற்றி எனக்கு புகார் வருகிறது. பெண்கள் எழுப்பினாலும் ஃபஜ்ர் தொழுகை மற்றும் பிற தொழுகையில் அவர்கள் சரியாக கவனம் செலுத்துவதில்லை. இந்த மக்கள் அல்லாஹ்வின் முன் **ரப்பனா ஹப்லனா மின் அஸ்வாஜினா வமின் துர்ரியாத்தினா குர்ரத்த அஃயுனின் வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா** என்ற துஆவை எந்த முகத்தை வைத்து வேண்டுவார்கள்? தமது சந்ததிகளில் கண்களின் குளிர்ச்சியை எவ்வாறு காண முடியும்? எவ்வாறு இவர்கள் தங்கள் சந்ததிகள் முத்தகியாக வேண்டும என துஆ செய்து அந்த துஆ நிறைவேறும் என எதிர்பார்க்கின்றனர்? ஆம். அல்லாஹ் ஒருவரை முத்தகீ ஆக்க விரும்பினால் அவர் மீது அருள்புரிய நாடினால் அதை யாராலும் தடுக்க முடியாது. அவன் அனைத்து சக்திகளும் படைத்தவன் ஆவான். அல்லாஹ்வின் அருளைப் பெற வேண்டும் என்றால், தக்வாவின் முன்மாதிரியைக் காட்ட வேண்டும். தத்தமது நிலையை சீர்திருத்த வேண்டும் என்பதும் அல்லாஹ்வின் கட்டளையாகும். எனவே, தமது சந்ததிகள் தங்களின் கண்களுக்கு குளிர்ச்சியாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த கட்டளைகளைப் பேண வேண்டும். அதாவது ஒரு தந்தை தமது பிள்ளைகளுக்கு நல்ல தர்பிய்யத்தை வழங்குவதை விட சிறந்த அன்பளிப்பு வேறு எதுவுமில்லை. மேலும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக விளங்கக் கூடிய அளவிற்கு பெற்றோரின் செயல்பாடுகள் விளங்கினால்தான் நல்ல தர்பிய்யத் கொடுக்க முடியும். பெற்றோர்களின் இபாதத்தின் நிலையும் உயர்ந்திருக்க வேண்டும். பிற ஒழுக்கங்களின் தரமும் உயர்ந்து காணப்பட வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் இடத்தில் இந்த வசனத்திற்கு விளக்கம் அளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்.

அல்லாஹ் நமக்கு நமது மனைவிமார்கள் மூலமும் சந்ததிகளின் மூலமாகவும் நமது கண்களுக்கு குளிர்ச்சியை வழங்குவானாக. மேலும் மனிதன் குழப்பம் மற்றும் தீய வாழ்வை மேற்கொள்ளாமல், இபாதுர் ரஹ்மானின் வாழ்க்கையை மேற்கொண்டால்தான் இது கிடைக்கும். மேலும் எல்லாவற்றையும் விட அல்லாஹ்விற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். **வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா** என்று இறைவன் தெளிவுபடக் கூறிவிட்டான். அதாவது சந்ததிகள் நேர்மையாகவும் முத்தகியாகவும் இருந்தால் இவர் முத்தகீன்களின் இமாமாகி விடுவார். இதில் மனிதன் தானும் இறையச்சமுடையவனாக இருப்பதற்கு துஆ உள்ளது.

எனவே, இந்த பொறுப்பு முதலில் ஆண்களுக்கு உள்ளது. மனிதனை இபாதுர் ரஹ்மானாக ஆக்குகின்ற வழிகளில் மனிதன் நடக்க வேண்டும். பெண்கள் தங்களது வீட்டின் கண்காணிப்பாளர்கள் என்ற ரீதியில் தக்வாவில் வழிநடந்தவாறு கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் தக்வாவின் வழியில் தர்பிய்யத் வழங்கும் பொறுப்பு உள்ளது. இதன் மூலம் சமூகத்தில் பயனுள்ளவர்களாக விளங்க முடியும். ஆனால் பெண்களின் தர்பிய்யத்திற்காக ஆண்கள் முதலில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு இருவரும் தக்வாவில் நிலைத்திருப்பார்கள். இருவரின் துஆவும் சந்ததிகளின் தர்பிய்யத்திற்கு உதவி செய்யும்.

நான் முதலில் கூறிய ஹதீஸில் கணவன் எழுந்தால், மனைவியை எழுப்ப வேண்டும். மனைவி எழுந்தால் அவள் கணவனை எழுப்ப வேண்டும் என வந்துள்ளது. இதன்படி செயல்பட ஒருவர் மற்றவருக்கிடையில் நல்ல தொடர்பு இருந்தால்தான் முடியும். ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் தன்மை இருக்க வேண்டும். மேலும் நாம் தொழுகையை பாதுகாக்க வேண்டும். எனவே நாம் காலையில் எழுவதற்கு ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். இந்த உணர்வு மற்றும் புரிந்து கொள்ளும் தன்மை இருக்க வேண்டும்.

சில நேரம் எனக்கு புகார் வருகிறது. சில ஆண்கள் கிடந்து தூங்குகிறார்கள். அப்போது மனைவி அவரை தொழுவதற்காக எழுப்பிவிட்டால் பாவம் அவளுக்கு ஏச்சுப்பேச்சுகள் மட்டுமின்றி சில வேளைகளில் அடியும் விழுகிறது. இதை நான் வெறும் உதாரணத்திற்காக மட்டும் கூறவில்லை. சில வீடுகளில் இது நடந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு நடக்கும் போது போகப்போக பெண்கள் அமைதியாக இருந்து விடுகிறார்கள். தங்களது தொழுகையைப் பாதுகாக்க துவங்கி விடுகிறார்கள். அல்லது கணவனின் தாக்கத்தின்கீழ் வந்து விடுகிறார்கள். சிலரது பிள்ளைகள் பௌதீக ரீதியில் நன்கு படித்து விடுகின்றார்கள். ஆனால் மார்க்க வி–யத்தில் மிகவும் மோசமாகி விடுகிறார்கள். சில நேரம் இவர்களது பிள்ளைகள் உலகரீதியிலும் மோசமாக ஆகி விடுகின்றனர். எனவே குழந்தைகளை கண்களுக்கு குளிர்ச்சியாக்குவதற்கு தாய் தந்தையர்கள் தங்களைத் தாங்களே சீர்திருத்திக்கொள்வது மிகவும் அவசியமாகும். மேலும் தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

தம்மை சீர்திருத்துவதற்காக பெண்களுக்கு சீர்திருத்ததை கற்றுக்கொடுப்பது நமது ஜமாஅத்திற்கு மிகவும் அவசியமாகும். அவ்வாறு செய்யத் தவறினால் அவர்கள் குற்றவாளி ஆவார்கள். மனைவி கணவனுக்கு முன் நின்று உன்னிடம் இந்தந்த குறைகள் எல்லாம் உள்ளன என்று கூறினால், அவள் அல்லாஹ்வுக்கு எப்படி அஞ்சுவாள். தக்வா இல்லை என்றால் பிள்ளைகள் தீயவர்களாக பிறக்கின்றார்கள். எனவே சந்ததிகள் **தய்யிப்** – தூயவர்களாக இருக்க வேண்டுமென்றால் தூய்மையின் ஒரு தொடர்பு தேவைப்படுகிறது. இது இல்லை என்றால் சந்ததிகள் கெட்டுப்போகிறார்கள். எனவே அனைவரும் பாவமன்னிப்பு வேண்டுங்கள். உங்கள் பெண்களுக்கு நல்ல முன்மாதிரியைக் காட்டுங்கள். மனைவி கணவனின் ஒற்றன் ஆவாள். அவன் தன் குறையை அவளிடமிருந்து மறைக்க முடியாது. மேலும் பெண்கள் மறைந்திருக்கும் விதை ஆவார்கள். அவர்களை முட்டாள்கள் என கருதாதீர்கள். அவள் தன்னுள் உனது அனைத்து தாக்கத்தையும் பெறுகிறாள். கணவன் நேரான வழியில் சென்றால், அவனுக்கு அஞ்சுவார்கள். பிறகு அல்லாஹ்விற்கும் அஞ்சுவார்கள். பெண்கள் கணவனிடமிருந்து பாதிப்பை பெறுகின்றனர். கணவன் எந்த அளவிற்கு திறமையை வளர்க்கின்றானோ, தக்வாவில் உயர்கின்றானோ அதிலிருந்து சில பகுதியைப் பெண்களும் பெறுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒவ்வொரு அஹ்மதி ஆண்களிடமும் இதைத் தான் எதிர்பார்க்கின்றார்கள். ஆண்களின் மீது மாபெரும் பொறுப்பு இருக்கின்றது. முந்தைய காலகட்டத்தில் பெண்கள் அறிவில்லாதவர்களாக இருந்தனர். படிப்பறிவு குறைவாக இருந்தது. ஆனால் இப்போது அல்லாஹ்வின் அருளால் பெண்களின் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு முன்பைவிட அதிகமாக கல்வியில்

பெண்கள் முன்னேறியுள்ளனர். ஜமாஅத்தில் கூட நான் கூறியது போன்று ஆண்களின் கடினத்தின் காரணமாக பெண்கள் அமுக்கப்படுகின்றார்கள். நன்மையை ஏவும் போது ஓர் இடத்தில் செய்வது அறியாது உட்கார்ந்து விடுகிறார்கள். மேலும் தமது நன்மையை நிலைநாட்ட முயற்சி செய்வதோடு நின்று விடுகிறார்கள். இவ்வாறு அமுக்கப்படுவதால் நிம்மதி இழந்து துன்புறுகிறார்கள். ஆண்களை விட பெண்களுக்கு தான் தன் குழந்தை தர்பிய்யத்திற்காக கவலை அதிகம் இருக்கின்றது. சில நேரம் ஆண்களின் சீர்கெட்ட நிலையின் காரணமாக பெண்கள் ஆண்களை விட்டு விலகி தனியாக வந்து விடுகின்றனர். பிறகு இதன் விளைவாக தந்தையின் கண்காணிப்பு குறிப்பாக தேவைப்படுகின்ற குழந்தைகள் மீது தீய தாக்கம் ஏற்படுகிறது. குழந்தைகள் இவ்வாறு இளமைப் பருவத்தில் காலடி எடுத்து வைக்கும்போது கெட்டு விடுகிறார்கள். இவ்வனைத்திற்கும் ஆண்கள் காரணமாகி விடுகிறார்கள்.

நமது இறைவன் நாமும் நமது குழந்தைகளும் நேர்வழியில் நிலைத்திருக்க வேண்டும் என நமக்கு ஒரு துஆவை கற்றுத் தந்து அதை ஏற்றுக்கொள்ளவும் நாடுகிறான். மேலும் அந்த துஆவின் சொற்களில் **ரப்பனா** என்ற சொற்கள் மூலம் அல்லாஹ் கூறுவது என்னவென்றால் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை. அவனோ உங்கள் இவ்வுலக வாழ்வையும், மறுவுலக வாழ்வையும் சீர்திருத்துவதற்காக மேலும் நமது சந்ததிகளின் சீர்திருத்தத்திற்காக சரியான வழியினை காட்டித்தந்து, உங்களுக்கு தனது அருட்கொடையை வழங்குகிறான். மேலும் இந்த வழியில் நடந்தால் எனது அருட்கொடைக்கு வாரிசாவீர்கள் என கூறுகிறான். ஆனால் நாம் இந்த அருட்கொடைளைப் பெற்று பயனடையவில்லை என்றால் இது நமக்கு மாபெரும் பேரிழப்பு ஆகும்.

நாம் நம்மை ஆராய்ந்தவாறு அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுகின்ற வழியில் நடக்க முயற்சி செய்ய வேண்டும். மேலும் நமது வீட்டின் அமைதியையும் எப்போதும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் நமது குழந்தைகளை நமது கண்களுக்கு குளிர்ச்சியூட்டக் கூடியவர்களாக ஆக்குவானாக. உண்மையில் ஒவ்வொரு அஹ்மதியின் வீட்டில் உள்ள அனைவரும் தக்வாவில் நிலைத்திருக்கச் செய்வானாக. அஹ்மதிகள் ஒவ்வொருவரும் தக்வாவின் வழியில் நடப்பவர்களாக இருக்க வேண்டும். இதுதான் நம்மை, காலத்தின் இமாமின் ஜமாஅத்தில் இணைந்ததன் கடமையைச் செய்தவர்களாக ஆக்கும். எனவே, **வஹ்ஹாப்** ஆகிய இறைவனிடம் வேண்டுகிறவர்களுக்கு அவர்கள் கற்பனை செய்யாத இடத்திலிருந்து கண்களுக்கு குளிர்ச்சி கிடைக்கிறது.

இங்கு இன்னொரு விஷயத்தையும் நான் உங்களுக்கு கூற விரும்புகிறேன். இந்த வி-யம் சில வீடுகள், குடும்பங்கள் பிளவுபட காரணமாகவும் அமைந்து விடுகிறது. அல்லது கணவன் மனைவிக்கு மத்தியில் ஏற்படுகின்ற கருத்து வேறுபாடு அவர்களின் பிள்ளைகளை பாதிக்கின்றது. அது என்னவென்றால் நமக்கு ஆண் பிள்ளைகள் ஏன் பிறப்பதில்லை? என்று சிலர் கூறுவதாகும். இதன் காரணமாக கணவன் மனைவிக்கு மத்தியில் பிளவு ஏற்பட்டு விடுகிறது. அல்லது கணவன் தன் மனைவியிடம் இதன் காரணமாக எப்போதும் கோபம் அடைகிறார்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:**

(ஹுஸூர் அவர்கள் அதிகாரம் 42-ன் 50-வது வசனத்தை ஓதினார்கள். அதன் பொருள்)

வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவன் விரும்புவதைப் படைக்கின்றான். அவன் விரும்புபவருக்குப் பெண் குழந்தைகளை வழங்குகின்றான். மேலும் அவன் விரும்புபவருக்கு ஆண் குழந்தைகளை வழங்குகின்றான். (42:50)

அல்லாஹ் தான் விரும்புபவருக்கு பெண் குழந்தைகளையும் தான் விரும்புவருக்கு ஆண் குழந்தைகளையும் வழங்குகிறான் என்று அல்லாஹ் கூறுகின்றான். மேலும் இன்னொரு இடத்தில் தான் விரும்புபவருக்கு ஆண் குழந்தை மற்றும் பெண் குழந்தைகள் இரண்டையும் வழங்குகிறான் என்று

கூறுகிறான். அல்லாஹ் வழங்குகின்ற அருட்கொடையை வைத்து பிறரை குற்றம் சுமத்துவது ஒருவரை தக்வாவிலிருந்து விலக்கி விடுகிறது.

இக்காலத்தில் இறைவன் மனிதனுக்கு மருத்துவத்தை வழங்கியுள்ளான். இதன் மூலம் சிகிச்சை செய்வது பலருக்கு பயனளிக்கின்றது. மேலும் ஆண் குழந்தைகள் விரும்புபவருக்கு சில நேரம் ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. ஆனால் இங்கும் அல்லாஹ் **ஃகாலிக்** படைப்பவன் என்ற தனது பண்பையும் தனது விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறான். இறைவனின் விருப்பத்திற்கு எதிராக நீங்கள் எவ்வளவு சிகிச்சை செய்து கொண்டாலும் அது எந்தப் பலனும் அளிக்காது. எனவே உனக்கு பெண் குழந்தைகள் மட்டுமே பிறக்கின்றன என்று கூறி மனைவியை துன்புறுத்துவது அல்லது பெண் குழந்தைகளின் மீது காட்ட வேண்டிய அன்பை காட்டாமல் அவர்களை புண்படுத்தினால் பின்னர் பெண் குழந்தைகளின் உள்ளத்தில் தந்தை மீது வெறுப்பு உருவாகி விடுகிறது. இந்தக் காலத்திலும் குழந்தைகள் மீது இவ்வாறு கொடுமை இழைக்கின்றவர்கள் இருக்கின்றார்கள் என நான் கேள்விப்படும்போது மிகவும் ஆச்சரியம் அடைகிறேன். இவ்வாறான சம்பவங்கள் பழைய காலத்தில், அறியாமைக் காலத்தில் பெண் குழந்தைகள் பிறந்து விட்டால் அவர்களின் முகம் கறுத்து விடுகிறது. எனவே இவையெல்லாம் அறியாமைக் காலத்தில் நடந்ததாகும். ஒவ்வொரு அஹ்மதியும் ஒவ்வொரு மூஃமினும் இதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு அஹ்மதி நபருக்கு நான்கைந்து பெண் குழந்தைகள் பிறந்தன. அவர் ஆண் குழந்தை வேண்டி இரண்டாவது திருமணம் செய்தார். இரண்டாவது மனைவிக்கும் மூன்று, நான்கு பெண் குழந்தைகள் பிறந்தன. அவர் ஆண் குழந்தை வேண்டும் என்பதற்காக மூன்றாவது திருமணம் செய்தார். அந்த மூன்றாவது மனைவிக்கும் மூன்று, நான்கு பெண் குழந்தைகள் பிறந்து விட்டன. பிறகு அவர் நான்காவது திருமணம் செய்து கொண்டார். இவர் மூலமும் அல்லாஹ் இவருக்கு பெண் குழந்தையைத் தான் கொடுத்தான். இறுதியில் முதல் மனைவிக்கு முதன் முறையாக ஆண் குழந்தைகள் பிறந்தது. ஆக, இது அல்லாஹ்வின் விருப்பமாகும். அவன் யாருக்கு என்ன நாடுகின்றானோ அதையே வழங்குகிறான். எனவே, ஆண் குழந்தை வேண்டுமென்றால் வீட்டில் நீங்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதற்குப் பதிலாக தக்வாவில் நிலைத்திருந்தவாறு அல்லாஹ்விடம் வேண்டுங்கள். மேலும் நேர்மையான சந்ததியை வேண்டுங்கள்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் நபிமார்களைப் பற்றி கூறும் போது துஆ கற்றுத் தந்துள்ளான்.

**ரப்பி ஹப்லி மினஸ் ஸாலிஹீன்** – என் இறைவா! நீ எனக்கு நல்ல சந்ததியைத் தந்தருள்வாயாக. (37:101)

இன்னொரு இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

**ரப்பி ஹப்லீ மில்லதுன்க ஃதுர்ரியத்தன் தய்யிபா** – என் இறைவா! நீ எனக்கு உன்னிடமிருந்து தூய்மையான சந்ததியைத் தந்தருள்வானாக. (3:39)

எனவே எப்போதும் நேர்மையான மற்றும் ஸாலிஹான சந்ததிகளை இறைவனிடம் வேண்டுங்கள்; விரும்புங்கள். எப்போதும் கண்களுக்கு குளிர்ச்சியை வழங்கக்கூடிய சந்ததியை வேண்டுங்கள். என்னிடம் சிலர் ஆண் குழந்தைக்காக துஆ செய்யுமாறு கூறுகிறார்கள். நான் எப்போதும் அவர்களுக்கு நல்ல, நேர்மையான, ஆரோக்கியமான சந்ததியை விரும்புங்கள்; வேண்டுங்கள் என அறிவுரை கூறுகிறேன். சில நேரம் ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் பெற்றோருக்கு அதிகம் தொண்டு செய்கிறார்கள். நேர்மையாளர்களாக விளங்குகிறார்கள். மேலும் பெற்றோருக்கு நல்ல பெயரை வாங்கித் தருகின்றனர். ஆனால், சில வேளைகளில் ஆண் குழந்தைகள் பெயரைக் கெடுத்து விடுகின்றனர். எனவே, ஒரு மூஃமின் எப்போதும் நேர்மையான, ஸாலிஹான பிள்ளைகளை வேண்ட வேண்டும். இதனால் நிரந்தரமாக அந்த பிள்ளைகள் பெற்றோருக்கு கண்களின் குளிர்ச்சியாக விளங்குகின்றனர். இல்லை என்றால் பெயரை கெடுக்கின்ற தீய சந்ததிகளால் மனிதனுக்கு என்ன பயன்? பல கடிதங்கள் எனக்கு வருகின்றது. அதில்

குழந்தைகள் கெட்டுப் போய் விட்டதன் காரணமாக நிம்மதியற்ற நிலைக்கும், கவலைக்குரிய நிலைக்கும் ஆளானது தெரிய வருகிறது.

எனவே மன நிம்மதி தான் அசல் விஷயமாகும். மேலும் சந்ததிகள் நல்லவர்களாகவும், நேர்மையாளர்களாகவும் இருக்க வேண்டும். இது இல்லை என்றால் பிறகு பிள்ளைகள் இருந்தும் பலன் இல்லை.

ஸாலிஹீன்கள் யார் என்பது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதை நான் எடுத்துரைக்கிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஸாலிஹீன்களிடம் எவ்வித ஆன்மீக நோயும் இருப்பதில்லை. மேலும் குழப்பத்தின் சாயல்கூட இருப்பதில்லை.

ஆக, இந்த தகுதியை நாம் அடைவதற்காகவே சந்ததிகளை விரும்பவும், வேண்டவும் வேண்டும். மேலும் நாமும் இதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் பின்னால் வருகின்ற தலைமுறையினரிடம் நன்மை உருவாகிக் கொண்டே இருக்கும். மேலும் தூய சந்ததிகள் பிறந்து கொண்டே இருக்க வேண்டும். மேலும் அவர்கள் தலைமுறை தலைமுறையாக தங்கள் பெற்றோருக்கு கண்களின் குளிர்ச்சியாகத் திகழ வேண்டும். மேலும் ஜமாஅத்திற்கும், குடும்பத்திற்கும் நல்ல பெயரை தேடித்தர வேண்டும்.

நாம் நமது நிலையை ஆராய்ந்து இதன் பக்கம் கவனம் செலுத்தாத வரை இது நடக்காது. நாமும் ஸாலிஹீன்களில் இணைந்து தக்வாவின் வழியில் முன்னேறாத வரை இது நடக்காது. எனவே, இந்த விஷயத்தைப் பற்றிப் பிடித்தவாறு செயல்படுவது மிகவும் அவசியமாகும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 14.11.2008

Translated by : **Maulavi S. Abdul Qadir Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**